**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்
# ஆண்டு 5

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
12

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.

1. இன்கலைகளுள் ஒன்று

- [ ] கரகம்
- [ ] காவடி
- [ ] சிற்பம்

2. பெயர்ச் சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

- [ ] வந்தான்
- [ ] கார்த்திகை
- [ ] படித்தாள்

3. ஒழுக்கம் பற்றிக் கூறும் அறநூல்

- [ ] திருக்குறள்
- [ ] சிலப்பதிகாரம்
- [ ] குயில்பாட்டு

4. மரம் என்பதன் பன்மை

- [ ] மரம்கள்
- [ ] மரங்கள்
- [ ] மரக்கள்

5. பூ + சாடி என்பதைச் சேர்த்து எழுதினால்

- [ ] பூசாடி
- [ ] பூம்சாடி
- [ ] பூச்சாடி

6. அழிவு இல்லாத நிலையான செல்வம்

- [ ] கல்வி
- [ ] பணம்
- [ ] வீடு

7. பவளக்கொடி என்ற பாடலைப் பாடியவர்

- [ ] பாரதியார்
- [ ] பாரதிதாசன்
- [ ] சோமசுந்தரப்புலவர்

8. ஓடுறன் என்பதன் எழுத்துவழக்கு

- [ ] ஓடுகிறேன்
- [ ] ஓடுகிறான்
- [ ] ஓடினான்

9. ஆண்டின் முதல் மாதம்

- [ ] மாசி
- [ ] பங்குனி
- [ ] தை

10. யானைக்குப் பந்தி போல ஆட்டுக்கு

- [ ] கூட்டம்
- [ ] மந்தை
- [ ] நிரை

11. இளங்கோவடிகளால் எழுதப்பட்ட நூல்

☐ சிலப்பதிகாரம் ☐ ஆத்திசூடி ☐ குயில்பாட்டு

12. சிரிக்கிறேன் என்பது

☐ முன்னிலை ☐ படர்க்கை ☐ தன்மை

13. கூல வகைகளுள் ஒன்று

☐ சோளம் ☐ மிளகு ☐ கிழங்கு

14. பாலாவி என்ற ஆறு ஓடுகின்ற இடம்

☐ முல்லைத்தீவு ☐ வவுனியா ☐ மன்னார்

15. மானின் ஆண் கலை போல குரங்கின் ஆண்

☐ அலவன் ☐ கடுவன் ☐ எருது

16. செவிமடுத்தல் என்ற மரபுத்தொடர் குறிப்பது

☐ ஆர்வமாகக்கேட்டல் ☐ உதவுதல் ☐ மதிப்பளித்தல்

17. ஆவினங்களைப் போற்றி வணங்குவது

☐ ஆடிப்பிறப்பு ☐ தைப்பொங்கல் ☐ மாட்டுப்பொங்கல்

18. வருவேன் என்பதன் எதிர்மறை

☐ வருகிறேன் ☐ வந்தேன் ☐ வரமாட்டேன்

19. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது

☐ உள்ளங்கை ☐ வாய் ☐ மூக்கு

20. ஒலிம்பிக் கொடியில் உள்ள வளையங்கள்

☐ நான்கு ☐ ஐந்து ☐ ஆறு

20 X 1 = 20 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொல்லியங்களின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. எலிகள் வலையை அறுத்தன.
2. அப்பா நல்ல பழங்களை வாங்கினார்.
3. தமிழரசி நாள்தோறும் செய்தித்தாளை வாசிப்பாள்.
4. ஆசிரியர் மாணவனை அழைத்தார்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | எலிகள் | | |
| 2. | | | |
| 3. | | செய்தித்தாளை | |
| 4. | | | |

10 X1 = 10 புள்ளிகள்

## 3 பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

உரையாற்றினான் | வாழ்கின்றன | சென்றேன் | இயற்றப்பட்டது | உயரமானது

1. இவ்வுலகில் எண்ணற்ற உயிரினங்கள் ____________________.
2. நான் உணவகத்துக்குச் ____________________.
3. இமயமலை மிகவும் ____________________.
4. மாணவன் மேடையில் நின்று ____________________.
5. ஆத்திசூடி ஔவையாரால் ____________________.

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
| --- | --- | --- |
| 1. Victory | 1. Sieg | 1. Seier |
| 2. Gold | 2. Gold | 2. Gull |
| 3. Crab | 3. Krebs | 3. Krabbe |
| 4. Market | 4. Markt | 4. Marked |
| 5. Sun | 5. Sonne | 5. Sol |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
| --- | --- | --- |
| 1. Vittoria | 1. Winst | 1. Sejr |
| 2. Oro | 2. Goud | 2. Guld |
| 3. Granchio | 3. Krab | 3. Krabbe |
| 4. Mercato | 4. Markt | 4. Marked |
| 5. Sole | 5. Zon | 5. Sol |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
| --- | --- | --- |
| 1. Seger | 1. Menestys | 1. |
| 2. Guld | 2. Kulta | 2. |
| 3. Krabba | 3. Rapu | 3. |
| 4. Torg | 4. Tori | 4. |
| 5. Sol | 5. Aurinko | 5. |

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. வானதி ______________________க் கொய்து மாலை கட்டினாள். (பூக்கள்)
2. இனியன் பொருள்கள் வாங்க ______________________ச் சென்றான். (அங்காடி)
3. கட்டுரை ______________________ எழுதப்பட்டது. (கயல்விழி)
4. செல்வியும் ______________________ இணைபிரியாத நண்பிகள். (குழலி)
5. அருவி ______________________ வீழ்கின்றது. (மலை)

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழரது ஓவியக் கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது எது?

______________________________________________

2. சுவையைக் கூட்டும் உணவுப் பொருள்கள் இரண்டு எழுதுக.

______________________________________________

3. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படுகின்றன?

______________________________________________

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

பலர்பால்: ______________________________________

ஒன்றன்பால்: ______________________________________

5. தரப்பட்டுள்ள சொற்கள் காட்டும் காலத்தை எழுதுக.

பாடினான்: ______________________________________

நீந்துகின்றன: ______________________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழர் கலைகள்
2. தைத்திருநாள்
3. எனது பொழுதுபோக்கு

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

## 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

உலகில் வாழும் உயிரினங்களுள் விலங்குகளும் அடங்குகின்றன. இவை வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் என இருவகைப்படுகின்றன. வீட்டில் அன்பாக வளர்க்கும் நாய், பூனை, ஆடு, மாடு போன்றன வீட்டு விலங்குகள் ஆகும். சிலர் வீடுகளில் செல்ல உயிரிகளாக வீட்டு விலங்குகளை வளர்ப்பார்கள். சிங்கம், புலி, கரடி, யானை போன்றன காட்டு விலங்குகள். மக்கள் பார்ப்பதற்காக விலங்குகளை வைத்திருக்கும் இடத்தை விலங்ககம் என்பார்கள். விலங்ககத்தில் காட்டு விலங்குகளைக் கூண்டுகளில் அடைத்து வைத்திருப்பார்கள். அவற்றைப் பார்க்க அச்சமாக இருக்கும். விலங்ககத்தில் உள்ள குரங்குகளைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருக்கும். விலங்ககத்திற்குச் செல்வது என்றால் சிறுவர்களுக்கு நல்ல விருப்பம்.

1. விலங்குகளின் வகைகள் எவை?

______________________________

______________________________

2. வீட்டில் வளர்க்கும் விலங்குகள் இரண்டு எழுதுக.

______________________________

3. காட்டு விலங்குகளை எவற்றில் அடைத்து வைத்திருப்பார்கள்?

______________________________

4. விலங்ககத்தில் எவற்றைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்?

______________________________

5. சிறுவர்களுக்கு எங்கே செல்ல விருப்பம்?

______________________________

______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள அறிவித்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.




1. பந்தெறிதல் தனி விளையாட்டாக நடைபெறும். ( )
2. விளையாட்டுப்போட்டி சோதியா தமிழ்ப்பள்ளியில் நடைபெறும். ( )
3. விளையாட்டுப்போட்டி 10:00 மணிக்குத் தொடங்கும். ( )
4. இல்லங்களுள் ஒன்று திலீபன். ( )
5. கிளித்தட்டு தனி விளையாட்டு ஆகும். ( )

5 X 1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |